**4.3.72 விழுப்புரம் மாவட்டத்தில் 6 ஊராட்சிகளைச் சேர்ந்த 466 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் 15 பணிமனைகள் கொண்ட கைவினைஞர் கிராமம் ரூ.60 லட்சம் செலவில் அமைத்தல்**

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் (மஅதி–2) துறை

அரசாணை (நிலை) எண்.78 நாள் : 28.5.2007

படிக்க :

1. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் 12.4.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்த அறிவிப்பு.
2. சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் நேர்முக கடித எண்.261/06/ஏ6, நாள் 17.4.2007.

**ஆணை**

12.4.2007 அன்று இத்துறையின் மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட அறிவிப்பினை செய்துள்ளார்.

“பாரம்பரியமிக்க நமது பண்பாட்டின் சின்னமாக விளங்கும் கிராம கைவினைஞர்கள் தொழில் மேம்பாட்டிற்காக, விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் ஒன்றும், மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்காவும் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.”

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து சுனாமி திட்ட செயலாக்க அலகின், திட்ட செயலாக்க அலுவலர் ஒரு திட்ட செயற்குறிப்பினை கீழ்க்கண்டவாறு அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்:–

6 ஊராட்சிகளைச் சேர்ந்த சுமார் 466 கைவினைஞர்கள் பயனடையும் வகையில் 15 பணிமனைகள் கொண்ட ‘கைவினைஞர் கிராமம்’ ஒன்று ரூ.60,00 இலட்சம் செலவில் விழுப்புரம் மாவட்டத்தில் உருவாக்கப்படும். இப்பணிமனைகளில் கைவினைஞர்கள் தளவாட சாமான்களை பயன்படுத்துவதற்கு ஒரு பொது சேவை மையம் அமைக்கப்படும்; மேலும், கைவினைஞர்கள் உற்பத்தி சார்ந்த பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை காட்சிக்கு வைக்கவும் இந்த பணிக்கூடங்கள் ஏதுவாக அமையும்.

3. அரசாணை (நிலை) எண்.655, வருவாய்த் துறை, நாள் 5.12.2005–ல், தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுனாமி அவசர கால உதவித் திட்டத்தின் கீழ் வாழ்வாதார நிதியாக ரூ.190.095 கோடி அரசு ஒதுக்கியுள்ளது என்றும், இதில் ரூ.38.00 கோடி சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் தெரிவித்துள்ளார். ஆகவே, விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் அமைக்க சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் கீழ் செயல்படுத்த போதுமான நிதி உள்ளது என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

4. மேற்கூறிய நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் கைவினைஞர் கிராமம் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். சுனாமி அவசர கால உதவித் திட்ட சமுதாய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கூறு நிதியின் கீழ் அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பிக்குமாறு அரசினை சுனாமி திட்ட செயலாக்க அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.சுனாமி திட்ட செயலாக்க அலுவலரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்த பின்னர், விழுப்புரம் மாவட்டத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டத்தின் (Tsunami Emergency Assistance Project) கீழ் ரூபாய் 60 இலட்சம் (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கைவினைஞர் கிராமம் அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது.

6. நிர்வாக ஒப்புதல் வழங்கும் பொருட்டு, விரிவான திட்டம் மற்றும் மதிப்பீடுகளை அரசிற்கு விரைந்து சமர்ப்பிக்குமாறு சுனாமி திட்ட செயலாக்க அலகின், திட்ட செயலாக்க அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்